**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 24/2025**

**வா.சா.1 – ஜெயலட்சுமி**

**<u>23-02-2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள வீடியோ புட்டேஜை யார் எடுத்தார்கள் என்ற விபரத்தை தெரிவித்துள்ளேனா என்றால் அவரை எனது கணவர் தான் ஏற்பாடு செய்தார். எந்த தேதியில் வீடியோ புட்டேஜ் என்வசம் ஒப்படைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் குறிப்பாக தேதி தெரியாது. எனது திருமணம் நடந்து 6 மாதம் கழித்து கொடுத்தார்கள். வீடியோ புட்டேஜை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றால் வீடியோ எடுத்த நபர் சான்றளிக்க வேண்டும் என்றால் அவர் கோயம்புத்தூரில் எங்கு உள்ளார் என்று தெரியாது. வீடியோ எடுத்த நபரை எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது என்பதால் வீடியோ புட்டேஜ் சட்டப்படி ஏற்கத்தக்க சான்றாவணம் அல்ல என்றால் சரியல்ல.

2. ஆறுமுகத்திற்கும் 1ம் பிரதிவாதி தேவிக்கும் கடந்த 24.02.1997ல் திருமணம் நடைபெற்று அதன் மூலம் லாவண்யா என்ற குழந்தை உள்ளதால் அதற்குபின்னிட்டு ஆறுமுகம் என்னை திருமணம் செய்ததாக நான் சொல்வது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 4ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.23 12:41:44 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.